**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி**
**OS. 18/2017 . நாள்.28.10.2024**

போச்சம்பள்ளி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. சாட்சி திறந்த நீதிமன்றத்தில் அழைக்கப்பட்டு ஆஜர். நீதிமன்றத்தில் கிரேடு 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. நசீம் பேகம் அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது. உரிமையியல் விசாரணை சட்டம் பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | முருகன் | **வயது** | 70 |
| **த/பெ. க/பெ.** | ராமசாமி | **மதம்** | |
| **முகவரி** | பென்றஅள்ளி | **தொழில்** | விவசாயம் |

**<u>வா.சா.2 ஆஜர். 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. மாதப்பனின் தகப்பனார் பெயர் சின்னமுனியப்ப கவுண்டர் ஆகும். மாதப்பனின் தம்பி பெயர் பாண்டுரங்கன் ஆகும். மாதனின் பெரியப்பா பெயர் பெரிய கரியன் (எ) முனியப்பன் ஆகும். சின்ன முனியப்ப கவுண்டரும், பெரிய கரியன் (எ) முனியப்பனும் அண்ணன் தம்பி ஆவார்கள். மேற்படி இருவருக்கும் வேறு உடன் பிறந்தவர்கள் கிடையாது. சின்ன முனியப்ப கவுண்டர் இறந்து சுமார் 30 ஆண்டுகள் ஆகும். பெரிய கரியன் (எ) முனியப்பன், சின்ன முனியப்ப கவுண்டருக்கு முன்பே இறந்துவிட்டார். அவருக்கு சுமார் 4 வருடங்களுக்கு முன்பு இறந்தார். வாதியின் உடன் பிறந்தவர் பாண்டுரங்கன் மற்றும் பாக்கியம் ஆகும். சின்ன முனியப்ப கவுண்டருக்கும், பெரிய கரியன் (எ) முனியப்பனுக்கும் இடையே பாகப்பிரிவினை ஏற்ப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. அந்த 2 பேருக்கும் மூதாதையர்கள் மூலமாக சொத்துக்கள் வந்தது. அந்த நிலம் 4 ஏக்கர் ஆகும். பாண்டுரங்கனுக்கு கிடைத்த 2 ஏக்கர் நிலத்தின் ஜக்குபந்தி மற்றும் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. மாதனுக்கு கிடைத்த 2 ஏக்கர் நிலத்தின் ஜக்குபந்தி மற்றும் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. சொத்துக்களை அளக்கவில்லை. வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள். சின்ன முனியப்ப கவுண்டர் மற்றும் பெரிய கரியன் (எ) முனியப்பன் ஆகியோர் சொத்து எதுவும் வாங்கவில்லை. சொத்துக்கள் பிதுராஜ்ஜித சொத்துக்கள் ஆகும். வாதி எந்த சர்வே எண்ணுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது.

2. வழக்கு தாவா சொத்தின் ஜக்குபந்தி தெரியாது. நீள, அகலம், விஸ்தீரணமும் தெரியாது. எந்த சர்வே எண்ணில் வீடு கட்டப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. அது நான் சின்ன பையனாக இருக்கும்போதே கட்டப்பட்டதாகும். மாதனின் தகப்பனார் 4–ம் பிரதிவாதி மாரியப்பனுக்கு எந்த சொத்தை விற்றார் என்று எனக்கு தெரியாது. மாதனின் தகப்பனார் வீடு எதுவும் கட்டவில்லை என்றும் நான் வழக்கிற்க்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாதனின் தகப்பனாரிடம் இருந்து 1981 ஆம் வருடம் மாரியப்பன் சர்வே எண்.55/2–ல் 50 சென்ட் நிலத்தை கிரையம் பெற்று அதில் வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. எம். மாதன் 2003 ஆம் வருடம் மூர்த்தி என்பவருக்கு சர்வே எண்.55/2–ல் 25 சென்ட் நிலம் விற்பனை செய்தது எனக்கு தெரியாது. அவ்வாறு விற்க்கும்போது மேற்படி கிரைய பத்திரத்தில் மாரியப்பனின் நிலத்திற்க்கு வடக்கு என ஜக்குபந்தி குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ள விவரம் எனக்க தெரியாது.

3. தங்கராஜ்ம், மாதனும் சேர்ந்து கணேசனுக்கு சர்வே எண்.55/2–ல் 50 சென்ட் நிலத்தை 2003 ஆம் வருடம் விற்பனை செய்தது எனக்கு தெரியாது. அவ்வாறு விற்பனை செய்த பிறகு சர்வே.55/2–ல் வாதிக்கு எவ்வித நிலமும் இல்லை என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.55/2D–ல் கரியன் (எ) பெரிய முனியப்பனுக்கு பாகமாக வந்தது என்றும் அதில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றும் வாதி கேட்டுக்கொண்டதற்க்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி வீடு கட்டி குடியிருந்து வருவதாக சொல்வதும் அதற்க்கு

வரி கட்டி வருவதாக சொல்வதும், வழக்கிற்க்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழக்கு சொத்து பற்றி எவ்வித விவரமும் தெரியாது என்றும், அதன் உரிமை மற்றும் அனுபவ விவரங்கள் எதுவும் தெரியாது என்றும் வழக்கிற்க்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் பாகம் பிரிக்க சென்றதாகவும், உடன் ஆட்கள் வந்ததாகவும் கூறியுள்ளது பொய்யானது என்றும் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.